## நிவாரண உதவி வழங்குவதில்,

# ‘திராவிட மாடல்’ அரசு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது!

## மீனவர் நலத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, பிப்.29–

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பாக, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்றது.**

**இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீனவர்களுக்கு 12 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

**12 கோடியே 88 லட்சம் ரூபாய்**

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழை வெள்ளத்தால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் சேதமடைந்த விசைப் படகுகள், கட்டுமரங்கள், வலைகள், இயந்திரங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களான மீனவர்கள் என 9 ஆயிரம் பேருக்கு நிவாரணம் என்ற அடிப்படையில் மொத்தம் இன்று மட்டும் 12 கோடியே 89 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்குகின்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**மீனவ நண்பர்களின் சேவையைப் பாராட்டி உதவிகள்!**

கடந்த ஜனவரி 23-ஆம் தேதியன்று இதே போல் மழைவெள்ள பாதிப்பின்போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட மீனவர்களுக்கு அரசு சார்பாக நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலும் பங்கேற்கின்ற வாய்ப்பை எனக்கு அமைச்சர் அவர்கள் அளித்திருந்தார்கள். அப்பொழுது, நம் மீனவ நண்பர்களின் சேவையைப் பாராட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருந்தோம்.

இப்படி மீனவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பது எனக்கு மிகுந்த கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் பெருமை. நம் முதலமைச்சர் அவர்கள் மீனவர்கள்மீது எப்பொழுதுமே தனி அக்கறை, தனி அன்பு கொண்டவர்.

**வாழ்வாதாரத்திற்கான நிவாரணம்!**

டிசம்பர் மாத மழை வெள்ளத்திற்குப் பிறகு, முதலில் உங்கள் செயல்களுக்கான அங்கீகாரத்தை இந்த அரசு கொடுத்தது. இப்பொழுது கணக்கெடுப்புப் பணிகளெல்லாம் நிறைவுறப் பின்னர், உங்கள் வாழ்வாதாரத்திற்கான நிவாரண உதவிகளை நம் திராவிட மாடல் அரசு வழங்குகின்றது.

மீனவர்களுக்கு ஜனவரி மாதம் நடந்த பாராட்டு விழா நிகழ்ச்சி, நம் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் நடந்தது. இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கும் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியிலிருந்து நிறைய மீனவ பெருமக்கள் வந்திருக்கிறீர்கள்.

இன்றைய நிகழ்ச்சியில் முழுவதுமாக பாதிக்கப்பட்ட 25 விசை படகுகளுக்கு மொத்தம் ரூபாய் 88 லட்சத்து 65 ஆயிரம், பகுதியாகச் சேதமடைந்த 5 விசைப்படகுகளுக்கு மொத்தம் 2 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய், முழுதாக மற்றும் பகுதியாகப் பாதிப்படைந்த வல்லங்களுக்கு மொத்தம் 2 கோடியே 15 லட்சம், முழுதாகவும் பகுதியாகவும் சேதமடைந்த 315 கட்டு மரங்களுக்கு மொத்தம் ரூபாய் 53 லட்சம்,

**சேதமடைந்த படகு வலைகளுக்கு நிதியுதவி!**

சேதமடைந்த 4,370 வலைகளுக்கு மொத்தம் ரூபாய் 6 கோடியே 92 லட்சம், சேதமடைந்த 3,297 இயந்திரங்களுக்கு மொத்தம் ரூபாய் 2 லட்சத்து 43 ஆயிரம் என மொத்தமாகக் கிட்டத்தட்ட 12 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நிவாரணங்களை நம் கழக அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு அளித்திருக்கின்றார்கள்.

மிக்ஜாம் புயல் ஏற்படுத்திய வெள்ளம் மற்றும் தூத்துக்குடி, திருநெல்வேலியில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது உங்களின் உயிரைப் பணயம் வைத்து, மக்களை மீட்க துணை நின்றவர்கள்தான் நம் மீனவப் பெருமக்கள். எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, எந்தவிதப் பிரதிபலனுமின்றி எதிர்பார்க்காமல் யாரும் கேட்காமல், கூப்பிடாமல் களத்திற்கு உங்களின் படகுகளை எடுத்துச் சென்று மக்களின் உயிரைக் காப்பாற்றியவர்கள் நீங்கள்தான் என்று ஏற்கனவே, பல முறை சொல்லியிருக்கின்றேன்.

**மீனவக் கடவுள்கள்!**

எனக்கு இறை நம்பிக்கை கிடையாது. ஆனால், யார் ஒருவன் சக மனிதருக்கு உதவுகின்றானோ, எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் உதவுகிறானோ அவன்தான் உண்மையாகக் கடவுளுக்குச் சமம், இறைவனுக்குச் சமம். அந்த வகையில் இங்க வந்திருக்கக்கூடிய நீங்கள் அத்தனைப்பேரும் மீனவக் கடவுள்கள்.

சென்னை மெரினாவில் 2017ஆம் ஆண்டு மிகப்பெரிய ஜல்லிக்கட்டுப் போராட்டம் நடந்தது. ஜல்லிக்கட்டைக் காப்பதற்காக மாணவர்கள் போராடினார்கள். அவர்கள் மீது அன்றைய அரசு ஒரு மிகப்பெரிய தாக்குதலை நடத்தியது. ஆனால், அந்த மாணவர்களைக் காக்க, போராடியவர்கள்தான் இங்கு வந்திருக்கக்கூடிய மீனவர் பெருமக்கள். எதுவென்றாலும், ‘சரி என்றால் சரி, தவறு என்றால் தவறு’ என்று நேர்மையோடு மனதில் பட்டத்தை வீரத்தோடு சொல்பவர்கள்தான் இந்த மீனவப் பெருமக்கள்.

இந்தியாவிலேயே ஊட்டச்சத்து மிகுந்த மாநிலம் என்றால், அது தமிழ்நாடு. அதற்குக் காரணம் நீங்கள் கொண்டு வந்து எங்களுக்குக் கொடுக்கின்ற அந்த மீன்கள்தான். மீன் உணவு நம் தமிழ்நாட்டு மக்களை ஆரோக்கியமானவர்களாக வைத்துள்ளது என்றால், அதற்கு இங்கு வந்திருக்கக்கூடிய மீனவப் பெருமக்கள்தான் காரணம்.

நம் மீனவர்களுக்காகக் கழக அரசு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். மீனவர்கள் நலவாரியத்தின் உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைகின்ற பொழுது அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயாக இருந்த நிவாரணத்தொகை உயர்த்தப்பட்டு, ரூபாய் 25 ஆயிரம் ரூபாயாக இப்பொழுது அளிக்கப்படுகின்றது.

**மீன்வளப் படிப்பு 20% உயர்வு!**

மீன்பிடிப் படகுகளுக்கு உரிமம் வழங்கும் காலம் ஒரு வருடத்தில் இருந்து இப்பொழுது மூன்று வருடங்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மீன்வளப் படிப்பில் சேர்கின்ற மாணவர்களுக்கு ஐந்து சதவிகிதம் இருந்த இட ஒதுக்கீட்டை இப்பொழுது நம் திராவிட மாடல் அரசு வந்த பிறகு, நம் முதலமைச்சர் அவர்கள் ஐந்து சதவிகிதம் என்றிருந்த, இட ஒதுக்கீட்டை இப்பொழுது 20 சதவிகிதமாக உயர்த்தி, வழங்கிக் கொண்டிருக்கிறது.

இந்திய ஒன்றியத்தில் எந்த அரசுமே செய்திடாத வகையில், ராமநாதபுரத்தில் மிகப்பெரிய மீனவர்கள் மாநாட்டை நம் அரசு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடத்தி முடித்தது. அந்த மாநாட்டில் நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை ஏற்று, பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதில் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே நினைவு கூற விரும்புகின்றேன். மீன்பிடித் தடைக்கால நிவாரணத்தை ரூபாய் 5 ஆயிரத்திலிருந்து ரூபாய் 8 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்தவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்படும் மானிய விலை மண்ணெண்ணெயின் அளவை, ஆண்டுக்கு 3,400 லிட்டலிருந்து 3,700 லிட்டராக உயர்த்தித் தந்தார் நம் முதலமைச்சர் அவர்கள்.

நாட்டுப் படகுகளுக்கு வழங்கப்படும் வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் அளவை ஆண்டுக்கு 4,000 லிட்டலிருந்து 4,400 லிட்டராக உயர்த்தியது, நம்முடைய அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதுமட்டுமல்ல, விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டரில் இருந்து 19,000 லிட்டராகவும் உயர்த்தி, நம் முதலமைச்சர் அவர்கள்தான் உத்தரவிட்டிருந்தார்கள்.

மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின் கீழ், வீடுகளுக்கான மதிப்பீட்டுத் தொகையாக இருந்த ரூபாய் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாயை உயர்த்தி ரூபாய் இரண்டு லட்சத்து 40 ஆயிரமாக நம் முதலமைச்சர் அவர்கள் தான் அறிவித்தார்கள்.

**நிதி நெருக்கடிக்கு மத்தியில் ஏராளமான திட்டங்கள்!**

கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஏராளமான நலத்திட்டங்களை, நம் மீனவர்களுக்கு கழக அரசு செய்து கொடுத்திருக்கிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் நம் கழக அரசு நம் முதலமைச்சர் அவர்கள் கடும் நிதி நெருக்கடிக்கு மத்தியில்தான் இதையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும். இனிவரும் காலங்களிலும் நமது முதலமைச்சர் அவர்கள் மீனவர்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்துவார்கள். உங்கள் கோரிக்கைகளுக்குக் கண்டிப்பாக ஒரு விடிவுகாலம் பிறக்கும். மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்பிற்காக, ஒன்றிய அரசிடமிருந்து நாம் கேட்ட நிவாரணத் தொகையிலிருந்து இதுவரை ஒரு பைசா கூட வரவில்லை. ஆனாலும் மீனவர்களுக்கு மட்டுமல்ல, சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினருக்குமான திட்டங்களை நம் கழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

உதாரணத்திற்கு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, இதுவரை ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்கள் ஒவ்வொரு நாளும் 17 லட்சம் பேர் பயன் பெற்று வருகிறார்கள்.

மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி. அந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதம் 850 ரூபாய் சேமித்து வருகிறார்கள். வருடத்திற்குக் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மிச்சமாகிறது. இந்த இரண்டரை வருடத்தில் மட்டும் மகளிர் கிட்டத்தட்ட 450 கோடிப் பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இது மிகப்பெரிய ஒரு வெற்றி.

**அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டு!**

இந்தத் திட்டத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி, பக்கத்து மாநிலங்களில் கர்நாடக மாநிலத்திலிருந்து வந்து, இதைப் பார்த்துவிட்டு இந்தத் திட்டத்தை அவர்களுடைய மாநிலத்திற்கு எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்றால், நம் அரசு, கழக அரசு, திராவிட மாடல் அரசு இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய அரசாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

புதுமைப்பெண் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்கக் கல்லூரியில் சேர்ந்தால், எந்தத் தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அந்த மாணவி படிக்க வேண்டும் என்பதற்காக கல்வி ஊக்கத் தொகையாக, புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்றோம். இதன் மூலம் 2 லட்சத்து 72 ஆயிரம் மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துக்கொண்டு போய் சேர்க்க வேண்டும். இதுதான் `எல்லோருக்கும் எல்லாம்’ என்ற திராவிட மாடல் ஆட்சி என்று நாம் சொல்லுகின்றோம். எனவே, நம் அரசின், நம் முதலமைச்சரின் முகமாக, பிராண்ட் அம்பாசிடர்களாக, அரசின் தூதுவர்களாக நீங்கள் அத்தனை பேரும் இருந்து, இந்த அரசிற்கும் நம் முதலமைச்சர் அவர்களுக்கும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிவாரணங்கள் மூலம் உங்களுடைய படகுகளைச் சரிசெய்து உங்கள் மீன்பிடித் தொழிலை சிறப்பாகத் தொடர என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே, இந்த வாய்ப்பை அளித்த நம் அமைச்சர் அவர்களுக்கும், வந்திருக்கக்கூடிய அனைத்து மீனவ சகோதர, சகோதரிகள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு, ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராச்சாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, எபினேசர், துரை.சந்திரசேகர், அசன் மௌலானா, துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் ரெஸ்மி சித்தார்த் ஜெக்டே ஐ.ஏ.எஸ்., மாநகராட்சியின் மண்டலத் தலைவர் மதன்மோகன், வி.பி.பொன்னரசு, பாலச்சந்தர், உமரி சங்கர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.




நேற்று முன்தினம் (27.02.2024) சென்னை, கலைவாணர் அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் “மிக்ஜாம்” புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் தென்காசியில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையம், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் மையம், ஒலி புகாஅறை, செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு இரத்த சேமிப்பு அலகு, வல்லம் மற்றும் சங்கரன்கோவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்வு மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று துவக்கி வைத்தார். உடன் தனுஷ் எம். குமார் எம்.பி., தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., பழனி நாடார் எம்.எல்.ஏ. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குனர் மரு.கமலவாசன் தென்காசி மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குனர் மரு.பொ.பிரேமலதா உள்பட பலர் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பேருந்து நிலையத்திலிருந்து பார்த்திபனூர், அபிராமம், கமுதி வரை சென்று மீண்டும் அதே வழித்தடத்தில் பரமக்குடி பேருந்து நிலையம் வந்தடைந்து பின்பு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை செல்லும் புதிய வழித்தடத்தில் செல்லும் புதிய பேருந்தை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் பேருந்து நிலையத்திலிருந்து ரிப்பன் வெட்டி, கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் காரைக்குடி மண்டல பொது மேலாளர் சிங்காரவேலு, துணை மேலாளர் வணிகம் நாகராஜன், துணை மேலாளர் தொழில்நுட்பம் நலங்கிள்ளி, ராஜ்குமார், கமுதி கிளை மேலாளர், ரவி பரமக்குடி கிளை மேலாளர் மற்றும் நகர் மன்றத்தலைவர் சேது கருணாநிதி, ஒன்றியச் செயலாளர்கள் சக்தி, அண்ணாமலை, ஜெயக்குமார், குணசேகரன், கிருஷ்ணமூர்த்தி, நகரச் செயலாளர் ஜீவரத்தினம், முன்னாள் ஒன்றியச் செயலாளர் சந்திரசேகர், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எம்.டி. ஆனந்த், பூமிநாதன், ஒன்றிய துணை செயலாளர் க.திலகர், நகர் மன்ற உறுப்பினர்கள் மாரியம்மாள் முமூர்த்தி, கிருஷ்ணவேணி பழனிக்குமார், நகர் கழக பொருளாளர் ஜானகி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.